களை ஏற்படுத்துவதிலேயே ஒருவகையான பயிற்சி தேர்ச்சி பெறுகிறவர்களுக்குக் கிடைக்கக் கூடும் என்பது ஒரு காரணம், சிலருக்கு வேலை கிடைப்பதோடு கூட பல்வேறு வகையில் பயிற்சி பெறுகிறவர்களுக்கு ஊக்கம் ஊட்டுவதாக இருக்கும். மற்றொன்று—மருத்துவ மனைகளுக்குத் தேவைப்படுகிற நம்பகமான—தரமிக்க மருந்துகளை உற்பத்தி செய்துகொள்ளக்கூடிய வாய்ப்பு கிடைக்கிறது. அது பற்றிய ஆய்வுப் பணிகள்தான் இப்போது முடிந்திருக்கிறது. இன்னும் கட்டிட பணிகள்—தேவையான கருவிகளைப் பெறும் பணிகள் பற்றி ஆராய்ந்தாக வேண்டும். 3—9—73-ல்தான் இவர்களது அறிக்கை அரசுக்குக் கிடைத்தது. இதனை வெவ்வேறு கட்டத்தில் அரசாங்கம் பரிசீலனை செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. வை. பாலசுந்தரம் : பி.பார்மஸி படித்த மாணவர்கள் வெளியில் சொந்தமாக தொழில் துவங்க விரும்பினால்—அப்படித் தொழில் துவங்குவது நாட்டுக்கு நன்மை பயக்கும் என்ற காரணத்தினால்—அரசு அவர்களுக்குச் சலுகை வழங்க—மானியம் வழங்க முன்வருமா ?

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : பொதுவாகவே இப்போது எதற்கெடுத்தாலும் மானியம் வழங்கப்படுமா என்கிறார்கள். தொழிலுக்கு மானியம் வழங்குவது என்பது இயலக்கூடிய ஒன்றல்ல. கடன் வேண்டுமானால்—கடன் கேளுங்கள்—கேட்டால் கொடுப்பார்கள்—என்கிற அளவுக்கு திருமதி இந்திரா காந்தி அம்மையார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள் வங்கிகளை தேசியமயமாக்குவதன் மூலம். அதைப் பயன்படுத்திக்கொள்ளலாம்.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

பதிவுத் துறை உதவிப் பதிவாளர்கள்.

*750 வினா—**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** மாண்புமிகு பின்தங்கிய வகுப்பினர் நல அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1970ஆம் ஆண்டில் பதிவுத் துறையில் உதவியாளராகப் (Assistant) பணியாற்றியவர்களில் மாநில முழுவதும் எத்தனை பேருக்கு உதவிப் பதிவாளராக (Sub-Registrar) பதவி உயர்வு கொடுக்கப்பட்டது ?

(இ) 1971ஆம் ஆண்டில் பதவி இறக்கம் மீண்டும் செய்யப்பட்டது உண்மையா ?

1974 ஏப்ரல் 4]

(உ) எவ்வளவு பேர் பதவி இறக்கம் செய்யப்பட்டனர்?

(எ) அதற்கு உரிய காரணம் யாது?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : (அ) 1970ஆம் ஆண்டில் டிசம்பர் திங்கள் முடிய 46 உதவியாளர்களுக்கு உதவிப் பதிவாளர் பதவி உயர்வு கொடுக்கப்பட்டது.

(இ) ஆம். சிலர் பதவியிறக்கம் செய்யப்பட்டனர்.

(உ) 1970ஆம் ஆண்டில் பதவி உயர்வு தரப்பட்டவர்களில் ஐவரும், 1971ஆம் ஆண்டில் பதவி உயர்வு தரப்பட்டவர்களில் ஐவரும் 1971ஆம் ஆண்டில் பதவியிறக்கம் செய்யப்பட்டனர்.

(எ) 1970ஆம் ஆண்டில் பதவி உயர்வு தரப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த 5 பேர்களும், அவர்களுக்கு பதவி உயர்வு தரப்பட்ட சமயம் முழுத் தகுதி பெறாதவர்கள் (not fully qualified) ; அதாவது விதிகளிலுள்ளவாறு இரண்டாண்டு காலம் உதவியாளர்களாகப் பணியாற்ற வில்லை என்பதால் அவர்களை பதவி இறக்கம் செய்யும்படி அரசு ஆணையிட்டது. அதன்படி அவர்கள் 5 பேர்களும் பதவி இறக்கம் செய்யப்பட்டனர்.

1971ஆம் ஆண்டில் பதவி உயர்வு தரப்பட்ட தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவர்கள் 5 பேர்கள். அவர்களுக்கு பதவி உயர்வு தரப்பட்ட சமயம், அவர்கள் முழுத் தகுதி பெறாதவர்கள் என்ற காரணத்தால் பதவி இறக்கம் செய்யப்பட்டனர்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : அமைச்சர் அவர்கள் முழுத் தகுதி பெற வில்லை என்றார்கள். முழுத் தகுதி என்ன? இவர்களிடம் என்ன என்ன தகுதி குறைவாக இருந்தது? மீண்டும் அவர்களுக்கு பதவி உயர்வு தர முயற்சிக்கப்பட்டதா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன் : இப்போது மீண்டும் பதவி உயர்வு தரும்படியான நிலை பரிசிலனையில் இருக்கிறது.

திரு. ஜே. ஜேம்ஸ் : புதியதாக அமைக்கப்படுகிற பதிவு அலுவலகம் எந்த அடிப்படையில் அமைக்கப்படுகிறது? கழிந்த பல ஆண்டுகளாக வேற்கிளம்பியல் ஒரு பதிவு அலுவலம் ஏற்படுத்த வேண்டுமென்று கோரப்பட்டு வந்ததே, அது ஏன் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை? அதற்கான காரணத்தை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: ஏறத்தாழ 1,500-க்கும் அதிகமாக பதிவு ஆகக்கூடிய நிலை இருந்தால்தான் அங்கே ஒரு பதிவு அலுவலகம் ஏற்படுத்தப்படும். மாண்புமிகு உறுப்பினர் கூறிய இடம் பற்றி பரிசீலனை செய்யப்படுகிறது.

திரு. ஆ. கு. சுப்பையா: தகுதி இல்லாதவர்களுக்கு ஏன் பதவி உயர்வு அளிக்கப்பட்டது? பதவி உயர்வு அளித்த பிறகு ஏன் பதவி இறக்கம் செய்யப்பட்டது? திரும்ப அவர்களுக்கு பதவி உயர்வு அளிப்பார்களா?

மாண்புமிகு திரு. என். வி. நடராசன்: பதவி உயர்வு அளிப்பது ஐ.ஜீ. பொறுப்பு—அதில் சில சிக்கல்கள் ஏற்பட்டுவிட்டன என்பதனால்தான் அது திரும்ப பரிசீலிக்கப்பட்டது. இப்போது அவர்களுக்கு தகுதி இருப்பதை ஆராய்ந்து பதவி உயர்வு அளிக்கப்படுவதைப்பற்றி பரிசீலிக்கப்படுகிறது.

East Coast Road.

* 751 Q.—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state the details of the Central aid received for the East Coast Road from Madras to Kanyakumari as on this date?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: கிழக்கடற்கரை சாலைக்காக மத்திய அரசிடம் பெற்ற உதவியின் விபரம் பின்வருமாறு:—

(1) பொருளாதார அல்லது பல மாநில முக்கியத்துவ திட்டத்தின் கீழ் மானியம் ரூ. 16 லட்சம்.

(2) மத்திய சாலை நிதித் திட்டத்தின் கீழ் ஒதுக்கீடு ரூ. 25 லட்சம்.

(3) பொருளாதார அல்லது பல மாநில முக்கியத்துவ திட்டத்தின் கீழ் கடனுதவி ரூ. 261 லட்சம்.

மொத்தம் ரூ. 302 லட்சம்.

திரு. என். டென்னிஸ்: இந்த வேலையின் மொத்த மதிப்பீடு எவ்வளவு? அது எப்போது முடிவடையும் என்று எதிர்பார்க்கலாம்?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவர் அவர்களே, மொத்த மதிப்பீடு ரூ. 302 லட்சம். மத்தியில் இருந்து கடனாகவும் மானியமாகவும் கேட்கப்பட்டிருக்கிறது. இதில் 28 வேலைகள் முடிவடையும் தருவாயில் இருக்கின்றன? வேலைகள் நடந்துகொண்டிருக்கின்றன.